REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஐப்பசி 23உ வெள்ளி (8—11—57) ★ ★ வெளியூர்: ஐப்பசி 24உ சனி (9—11—57) [இதழ் 126

மதுரைக் கைதிகளுக்கு திருக்குறள்

★

மதுரை, நவ. 6—

மதுரை மத்திய சிறையில் உள்ள கைதிகளுக்கு 'திருக்குறள்' புத்தகம் தருவது என நகர ரோட்டரி சங்கம் முடிவு செய்துள்ளது. மூலத்துடன், எளிய உரையும் கொண்டதாக இருக்குமாம் அந்தத் திருக்குறள்!

கடல் கடந்த தமிழர் படும் அவதி

நாளும் புதுப்புது இன்னல்களை எதிர் நோக்க வேண்டியவர்களாகின்றனர்

இலங்கை, பர்மாவைத் தொடர்ந்து மலாயாவிலும் தமிழர்க்குக் கொடுமை

இரப்பர் தோட்டங்களிலிருந்து துரத்தப்படுகின்றனர்

பயங்கரமான வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது

குடியுரிமை பெறுவதிலும் தொல்லை

கடல் கடந்துவாழும் தமிழர்கள் நாள்தோறும் புதுப்புது இன்னல்களையும், கொடுமைகளையும் எதிர்நோக்க வேண்டியவர்களாயுள்ளனர்.

இலங்கை, பர்மா முதலிய நாடுகளைப் போலவே, அண்மையில் சுதந்தரம் பெற்ற மலாயாவும், தன் பங்கிற்கு அங்கு வாழும் தமிழர்களுக்குக் கொடுமை புரியக் கிளம்பியுள்ளதாகத் தகவல் கிடைக்கிறது.

மலாயாவில் உள்ள இரப்பர் தோட்டங்களின் முதலாளிகளாக, சமீபகாலம் வரை வெள்ளையர் இருந்தனர். சுதந்தரம் பெறுகையில், அதிகார மாற்றத்தின்போது செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டின்படி, அவர்கள் தங்களுக்குச் சொந்தமான தோட்டங்களை விற்றுவிட முயலுகின்றனர்—விற்று வருகின்றனர். பெரும் தோட்டங்களை ஒரு சேர விற்கமுடியாது போனால் அவற்றைச் சுலபமாக வாங்கக் கூடிய கூறுகளாக்கி, விற்று வருகின்றனர்.

மொத்தமாகவோ, கூறுகளாகவோ தோட்டங்களை வாங்குகிறவர்கள், சீனர்களாகத்தான் இருக்கின்றனர்.

இந்த புதிய முதலாளிகள், ஆண்டாண்டுக் காலமாக அங்கு பணிபுரியும் தமிழ்த் தொழிலாளர்களை ஒட்டுமொத்தமாக வேலையிலிருந்து நீக்கிவிட்டு, சீனர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ள விழைகின்றனர்; விளைவாக, நூற்றுக்கணக்கான தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு 'வெளியேற்ற நோட்டீஸ்' பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவர்களை வேலையிலிருந்து நீக்கும்போது நியாயமாக இவர்களுக்குத் தரவேண்டிய 'கிராஜுடி,' நஷ்டஈடு முதலிய தொகைகளும் தரப்படுவதில்லை.

இதுபற்றி, முன்னைய வெள்ளை முதலாளிகளிடம் முறையிட்டபோது, அவர்கள் புதிய முதலாளிகளின் செயல்களுக்குத் தாங்கள் பொறுப்பாளிகளல்ல என்று தெரிவித்து விட்டனர்; என்றாலும், 'புதிய முதலாளிகள், ஏற்கனவே உள்ள தொழிலாளர்களை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டும் என்று தங்களால் ஏற்பாடு செய்யப்பட்டது' என்றும் அந்த வெள்ளை முதலாளிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஏற்பாட்டையும் மீறித்தான் சீனர்கள், தமிழர்களை வேலையிலிருந்து நீக்கிவருகின்றனர்.

தேசியத் தோட்டத் தொழிலாளர்களின் யூனியன், 'இது பற்றி, சர்க்கார் மட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றும், மேலும், 'தமிழர்கள் நீக்கப்படாமல் தடுப்பதுடன், ஏற்கனவே நீக்கப்பட்டவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்' என்றும், சர்க்காரை, சங்கம் கேட்டிருக்கிறது.

"பேராக் இராஜ்யத்தில் ஒரு தோட்டத்திலிருந்த 300 தமிழ்த் தொழிலாளர்களையும் மொத்தமாக வெளியே அனுப்பிவிட்டனராம், புதிய சீன முதலாளிகள்!

இந்தக் கொடுமை போதாது என்று, மலாயாவில் வாழும், தமிழர்களுக்கு, குடியுரிமை வழங்குவதிலும் தகராறு கிளம்பும்போலத் தோன்றுகிறது.

சிலரது குடியுரிமை மனுக்கள் இரண்டு ஆண்டுகளாகியும் பைசல் செய்யப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

மலாயா இந்தியர் காங்கிரஸ், இது பற்றி கவலைப்படுவதாகவும் தெரிகிறது.

அலுமினிய தொழிற்சாலை அமையுமா?

திட்டம் கைவிடப்படும் என்ற வதந்தி உண்மையா?

ரஷ்ய உதவி பற்றிய செய்தி என்னவாயிற்று?

சட்டசபையில் தோழர்கள் எம். பி. சுப்பிரமணியம், ஏ. கோவிந்தசாமி ஆகியோர் கேள்விமாரி

சென்னை, நவ. 7—

"சென்னை மாகிலத்தில் அலுமினியத் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்துவது பற்றி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது" என்று அமைச்சர் வெங்கட்ராமன் சட்ட மன்றத்தில் தெரிவித்தார்.

இத்திட்டத்தைக் கைவிடக் கூடாது என்று மத்திய அரசாங்கத்தை மாகில அரசாங்கம் வற்புறுத்தியுள்ளதென்றும் அவர் குறிப்பிட்டார்.

"வடநாட்டுத் தொழில் பிரமுகர் பிர்லா, மத்தியப் பிரதேசத்தில் ஓர் அலுமினியத் தொழிற்சாலை நிறுவ ஏற்பாடு செய்துவிட்டதாகப் பத்திரிகைகளில் வெளியான செய்தியையொட்டி, சென்னை மாகிலத்தில் அலுமினியத் தொழிற்சாலை விஷயம் கைவிடப்படும் என்று ஓர் வதந்தி நிலவுவது பற்றி அரசாங்கத்தின் கருத்து என்ன?"

என்று தோழர் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் கேட்டார்.

"பத்திரிகைகளில் வந்த செய்தியைக்கொண்டு எதையும் முடிவு செய்வது சரியல்ல" என்று தொழில் அமைச்சர் பதிலளித்தார்.

"சென்னை மாகிலத்தில் ஓர் அலுமினியத் தொழிற்சாலை நிறுவ ரூ. 10 கோடி உதவியளிக்க ரஷ்யா முன்வந்தது பற்றி அரசாங்கத்திற்குத் தெரியுமா?"

என்று தோழர் ஏ. கோவிந்தசாமி கேட்டார்.

"அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை" என்று அமைச்சர் பதிலளித்தார்.

'தீபாவளி கொண்டாடுவதை சர்க்கார் தடை செய்யுமா?'

சட்டமன்றத்தில் கழக உறுப்பினர்கள் கேள்வி

சென்னை, நவ. 7—

சிவகாசியிலிருந்து புகை வண்டி மூலம் வெடி மருந்துகள் அனுப்புவதற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்படவேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை சென்னை சர்க்கார் வற்புறுத்தியுள்ளதாம்.

'அணு' ரக வெடி மருந்துகள் தயாரிப்புக்கு தடுப்பு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லையாம்!

இரயில்வேக்களில் பட்டாசுகள் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குமாறு சிவகாசி வெடி மருந்து தயாரிப்பாளர்கள் சென்னை அரசாங்கத்திற்கு முறையிட்டனராம்.

"வெடி மருந்துகளைப் புகை வண்டி மூலம் அனுப்பப்படுவது தீபாவளியின்போது அதிகமாக இருப்பதாலும், பெட்டிகளில் நல்ல அமைப்புகள் இல்லாததின் காரணமாகவும் விபத்துகள் அதிகரித்துள்ளன என்பது உண்மையா? அப்படியானல் தீபாவளி கொண்டாடுவதைத் தடைசெய்ய அரசாங்கம் முன்வருமா?"

என்று, தோழர் க. அன்பழகன் அவர்கள் கேட்டார்.

"தீபாவளி கண்டிப்பாக எல்லோரும் கொண்டாட வேண்டும் என்பதே என்னுடைய கருத்து" என்று, அமைச்சர் பக்தவத்சலம் பதிலளித்தார்!

"தீபாவளியைத் தடை செய்ய முன்வராவிட்டாலும், வெடிகளை வெடிப்பதையேனும் சர்க்கார் தடை செய்யுமா?"

என்று, தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் கேட்டார்.

"ஆபத்தான விளையாட்டு கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து" என்றார் அமைச்சர்.

"தீபாவளி பண்டிகை தமிழர்களை இழிவுபடுத்துவது என்பதால், தீபாவளியைக் கொண்டாடாமலிருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?"

என்று, தோழர் எம். பி. சாரதி கேட்டார்.

"தீபாவளி கொண்டாடுவது அவரவர்களின் தனி விருப்பத்தைப் பொறுத்தது; அதனைப் பிரியத்துடன் கொண்டாடுபவர்கள் கொண்டாடலாம்; துக்கத்துடனும் கொண்டாடலாம்; சும்மாவும் இருக்கலாம்" என்று அமைச்சர் பதிலளித்தார்.

மடாலய ஊழல்களை ஒழிக்க சர்க்கார் எடுத்த நடவடிக்கைகள் என்ன?

ஏ. வி. பி. ஆசைத்தம்பி தொடுத்த கேள்விக்கணை

சென்னை, நவ. 7—

வானமாமலை மடத்திலும், ஆலயத்திலும் உள்ள ஒரு காப்பாளர் பற்றிய புகார்கள் தஞ்சை மாவட்ட அறநிலைய துணை ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதென்றும், அதுபற்றிய முழு அறிக்கை வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளதென்றும் கேள்வி நேரத்தின்போது அமைச்சர் பக்தவத்சலம் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

"இதேபோன்று பல மடங்களில் ஊழல்கள் மலிந்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?"

என்று தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி கேட்டார்.

"சட்டப்படி என்ன செய்ய முடியுமோ அதை அரசாங்கம் செய்துவருகிறது" என்று அமைச்சர் பதிலளித்தார்.

'மருத்துவ விடுதிகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ள சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?'

சட்ட மன்றத்தில் ஏ. கோவிந்தசாமி கேள்வி

சென்னை, நவ. 7—

"சென்னை நகரில் மொத்தம் 2,199 பேர் காலரா நோயினல் பிடிக்கப்பட்டனர்" என்று சட்டமன்றத்தில், கேள்வி நேரத்தின் போது மாகில உள்விவகார அமைச்சர் தெரிவித்தார்.

"காலரா நோயினல் பீடிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ வசதியளிக்கும் விடுதிகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ளாததின் காரணமாக, மக்கள் வீட்டிலேயே இருந்துவிடுகின்றனர்; எனவே, மருத்துவ விடுதிகளைச் சுத்தமாகவைத்துக் கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?"

என்று, தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் கேட்டார்.

"இது பற்றிக் கவனித்து ஆவன செய்யும்" என்று அமைச்சர் பதிலளித்தார்.

மலிவுப் பதிப்புகள் வெளியிடும் நிலையம்

"தமிழில் மலிவுப் புத்தகங்கள் வெளியிடுவதற்கு மாகில வெளியீடு நிலையம் ஒன்றை ஏற்படுத்தும் நோக்கம் சர்க்காருக்கு இல்லை" என பக்தவத்சலம்தெரிவித்தார்.

நம் நாடு

சென்னை 8—11—57 வெள்ளி

மறைமுகமாகத் திணிக்கும் சதி!

கல்வி பற்றிய சர்க்காரின் 'வெள்ளை அறிக்கை' பற்றி முன்னைய சட்டசபை உறுப்பினர்களடங்கிய குழு தந்துள்ள சிபாரிசுகள் நமது மாநில சட்டசபையில் இப்போது விவாதத்திலிருக்கின்றன.

இந்த விவாதத்தைத் துவக்கி வைத்து கல்வியமைச்சர் கனம் சுப்பிரமணியம் அவர்கள் பேசியிருக்கிறார்.

அப்போது, மொழிக்கல்விபற்றிய குழுவினது சிபாரிசுகளின் சிலாக்கியத்தைப் பாராட்டிய அவர், இந்தி கட்டாயப் பாடமாக்கப்படவில்லை என்பதாகவும்,எனவே, குழுவின் சிபாரிசுகளை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் வாதாடியிருக்கிறார்.

ஆனால்......!

குழுவின் சிபாரிசுகள் என்ன? நடைமுறையில் அவை எப்படி இயங்கும் என்பதை இங்கு ஆராய விரும்புகிறோம்.

உயர்நிலைப் பள்ளிக் கட்டத்தில் பிரதேச மொழி-அதாவது தாய் மொழிக்கு முதலிடம்; இந்தி அல்லது ஏதாவது ஒரு இந்திய மொழி இரண்டாம் மொழியாக வேண்டுமாம்; மூன்றாவது மொழியாக ஆங்கிலம் அல்லது வேறு ஏதாவது ஒரு இந்தியமொழி அல்லாத மொழி கற்பிக்கப்பட வேண்டுமாம்.

தாய் மொழி, இந்தி அல்லது வேறு ஒரு இந்திய மொழி, ஆங்கிலம் அல்லது வேறு ஒரு இந்திய மொழி அல்லாத மொழி ஆக மூன்று மொழிகள் கற்பிக்கப்பட வேண்டும் என்பது சிபாரிசு.

இரண்டாவதாகக் கற்றுத் தரப்படவேண்டியது என்று கூறப்படும் இந்தி அல்லது வேறு ஏதாவது ஒரு 'இந்திய மொழி', எந்த அவசியத்திற்காகக் கற்றுத் தரப்படல் வேண்டும் என்பது தெளிவாக்கப்படவில்லை.

தமிழ் நாட்டு மாணவர்களுக்கு, அந்த மொழி அறிவு எந்தவகையில் பயன்படும் என்பதற்கும் விளக்கம் இல்லை.

இந்தி அல்லது, ஏதாவது ஒரு 'இந்திய மொழி' என்று கூறப்படுவதின் நோக்கம் வெளிப்படுத்தப்படவில்லை.

இந்தி அல்லது ஏதாவது ஒரு 'இந்திய மொழி' என்று கூறப்பட்டாலும், நடைமுறையில், தமிழ்நாட்டில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் எல்லா இந்திய மொழிகளையும் கற்றுத் தர ஏற்பாடு இருக்குமா என்றால், இராது. அப்படி தற்போது ஏற்பாடு செய்வது நடைமுறையில் சாத்தியமல்ல.

தமிழ் மாணவனுக்கு, பிறிதோர் மொழியைக் கற்றுத்தர வேண்டுமானால், அவனது தாய் மொழி மூலம்தான் அந்த மொழி போதனை இருக்க வேண்டும். அப்படியானால், தமிழ் மாணவன் விரும்புகிற 'இந்திய மொழி' எதுவானாலும், தமிழ் மூலம்தான் அது போதிக்கப்பட முடியும் என்பதால், அதனைக் கற்றுத் தருவதற்குத் தமிழும், மாணவன் விரும்புகிற வேறு ஒரு 'இந்திய மொழி'யும் தெரிந்த ஆசிரியர் தேவைப்படும். உதாரணமாக, தமிழ் தெரியாத—தெலுங்கு மட்டுமே தெரிந்த ஒருவரால் தமிழ் மாணவனுக்கு தெலுங்கு போதித்துவிட முடியாது. ஆகவே, வேறு ஏதாவது ஒரு 'இந்திய மொழி' போதிக்க வேண்டும் என்ற ஏற்பாடு அமுலாக, தமிழும் இதர பதின்மூன்று 'இந்திய மொழி'களுள் ஏதாவது ஒன்றினையும் கற்ற ஆசிரியர்கள், எல்லா இந்திய மொழிகளையும் போதிப்பதற்கு தேவைப்படுவர். இதர 'இந்திய மொழி' கற்றவர்கள் தமிழ் நாட்டில் விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள்கூட இருக்கமாட்டார்கள். எனவேதான், ஏற்பாடு நடைமுறையில் சாத்தியமல்ல என்கிறோம்.

ஆனால் இந்த ஏற்பாடு நடைமுறையில் உண்மையில் எப்படி இருக்கும் என்றால், எல்லாப் பள்ளிகளிலும் இந்தி மட்டும் கற்றுத்தர ஆசிரியர் இருப்பர். ஆனால் இதர மொழிகள் கற்றுத் தரப்படும் என்ற ஏற்பாடு ஏட்டில்தான் இருக்கும்.

எனவே, இந்த ஏற்பாடு மறைமுகமாக இந்தியை கட்டாயப் பாடமாக்கும் ஏற்பாடு என்பதைத் தவிர வேறு என்ன?

சாமர்த்தியமாக வாதாடுவதாக நினைத்துக்கொண்டு பேசுகிறாரா, கனம் சுப்பிரமணியம்?

டெல்லி அனுப்பிய சுற்றறிக்கையில்,'இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் இந்தியைக் கட்டாயமாகப் படிக்க வேண்டும்' என்று கட்டளையிடப்பட்டிருக்கிறது; 'அதைப் பற்றிப் பிறகு பேசலாம்' என்று கூறியிருக்கிறார் மந்திரி; இருக்கட்டும்.

ஆனால், அந்தக் கட்டளையில், இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள், இதர ஏதாவது ஒரு வடநாட்டு மொழியைக் கற்கவேண்டும் என்று இருக்கிறதே தவிர, 'இந்திய மொழி' என்று குறிப்பிடவில்லை. 'தென்னாட்டு மொழிகளைக் கற்போம்' என சில பெரியவர்கள் உறுதி கூறியது ஒருபுறம் இருக்கட்டும்!

இந்தி மொழிக்காரர்கள் கற்க வேண்டுமெனக் கூறப்பட்டிருப்பது, வேறு ஏதாவது ஒரு வடநாட்டு மொழியை! 'அதுகூட ஏன்?'—என்று, அங்கு எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது.

ஆனால் இங்கோ, கனம் கல்வி அமைச்சர், தமிழ்நாட்டு மாணவர்கள் மட்டும் இந்தி அல்லது ஏதாவது ஒரு இந்திய மொழி கற்க வேண்டும் என்கிறாரே, ஏன்?

'இரண்டாவது மொழியாக, ஏதாவது ஒரு தென்னாட்டு மொழிகளைக் கற்றுக்கொள்ளட்டும்' என்று கூறினாலாவது, 'இந்தியை நாங்கள் திணிக்கவில்லை' என்ற அவரது வாதத்திற்குப் பொருள் இருக்க முடியும்.

எனவே, கனம் அமைச்சர் அவர்கள், தமது வடநாட்டு எசமானர்களின் விருப்பங்களை வெகு தந்திரமாக யாரும் அறியாமல் நிறைவேற்றிவிடலாம் என்று கனவு காண வேண்டாம் என்று எச்சரிக்கிறோம்.

'இந்தியைக் கட்டாயப் பாடமாக்குகிறோம்' என்று நேரடியாகச் சொல்லத் துணிவில்லாத நிலையில், மறைமுகமாக இந்தியைக் கட்டாயப் பாடமாக்கும் சதிதான் சர்க்காரின் இந்த ஏற்பாடு என்பதில் துளியும் சந்தேகமில்லை என்பதை தமிழ் மக்கள் நன்கு அறிவர்.

இதுபற்றி நாளை மேலும் எழுதுவோம்.

பஞ்சாப் மாநிலத்திற்கு மொழி அடிப்படையில் பிரதேச குழுக்கள்

உத்தரவு மூலம் நிறுவுகிறார் குடியரசுத் தலைவர்

புதுடில்லி, நவ. 5—

பஞ்சாபி வழங்கும் பகுதிக்கு ஒன்றும், இந்தி வழங்கும் பகுதிக்கு ஒன்றுமாக பஞ்சாப் மாநில சட்ட சபையிலிருந்து இரண்டு பிரதேசக் கமிட்டிகளை, குடியரசுத் தலைவர், அரசியல் சட்ட 371-வது பிரிவின் படி உத்தரவு ஒன்றுமூலம் நிறுவியுள்ளார்.

அந்த உத்தரவு, மேலும், பஞ்சாப் சர்க்காரின் வேலைகள் பற்றிய இப்போதைய விதிகளைத் திருத்தி அமைக்கிறது என்பதுடன், மக்கள் சபையில் கடந்த 1956-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தாக்கல் செய்யப்பட்ட பஞ்சாபுக்கான பிரதேசக் கமிட்டிகள் திட்டத்திற்கு ஒப்ப, பஞ்சாப் சட்டசபையின் இயக்க முறைகளையும் திருத்தி அமைக்கிறது.

ஒவ்வொரு பிரதேசக் 'கமிட்டி'யிலும், இந்தி அல்லது பஞ்சாபி பிரதேசத்தைச் சேர்ந்த தொகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இடம் பெறுவர்; முதன் மந்திரியும், சபைத் தலைவரும் எந்தக் கமிட்டியிலும் இருக்கமாட்டார்கள்.

இந்தப் பிரதேசக் கமிட்டித் திட்டப்படி, அவை பொறுப்பாயுள்ள 14 விவகாரங்கள் பற்றி அந்தக் கமிட்டிகளின் ஆலோசனையை சர்க்காரும் ஏற்றுக்கொள்ள வேண்டியது கட்டாயமாகும். இதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டால், விவகாரம், கவர்னரின் பார்வைக்குக் கொண்டுவரப்படும்; அவரது முடிவே இறுதியானதாகும்.

'கமிட்டி'களின் கூட்டங்களில் பொதுமக்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்; இரகசியமாகவே நடைபெறும்.

10 மணி நேரத்தில் சந்திரனை அடையலாம்

மனித குலத்தின் மிகப் பழமையான கனவு-சந்திரமண்டலத்தை அடைவது என்ற கனவு, நனவாக முடியும் என ரஷ்ய விஞ்ஞானிகள் கருதுகின்றனராம்.

இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள ராக்கெட்டுகளை மேலும் துரிதமாகச் செலுத்தக் கூடிய மிக உயர்ந்த சக்திவாய்ந்த எரி பொருள்களைக்கொண்டு மணிக்கு சுமார் 21 ஆயிரம் மைல் வேகத்தில் சென்றால் சந்திர மண்டலத்தை 10 மணிநேரத்தில் அடைந்துவிடலாம் என்று ஒரு ரஷ்ய விஞ்ஞானி கருத்தறிவித்திருக்கிறார்.

'நடைபெற்ற தடியடிப் பிரயோகம் அளவுக்கு மீறியது'

'சிறைக்கோட்ட வரலாறு காணாதது'

பெரோஸ்பூர் சிறைச் சம்பவம் பற்றிய விசாரணை அறிக்கை

சந்திகர், நவ. 5—

"பஞ்சாபில் இந்திக்கு ஆதிக்கம் கோரி கிளர்ச்சியில் ஈடுபட்டு கைதாகி, பெரோஸ்பூரில் சிறை வைக்கப்பட்டிருக்கும் இந்தி ரட்ச சமிதித் தொண்டர்கள்மீது, கடந்த ஆகஸ்டு 24-ந் தேதியன்று நடத்தப்பட்ட தடியடிப்பிரயோகம் அளவுக்கு மீறியது" என்று, அது குறித்து நீதிபதி கருத்தறிவித்திருக்கிறார்.

சம்பவம் பற்றி விசாரணை நடத்த எஸ். பி. கபூர் என்ற பஞ்சாப் உயர் நீதிமன்ற நீதிபதி நியமிக்கப்பட்டார்.

அவரது அறிக்கையின் சாராம்சத்தை சர்க்கார் வெளியிட்டுள்ளது.

அவர் கூறியிருப்பதாவது:—

"துவக்கத்தில் கொஞ்சம் பலாத்காரம் உபயோகிப்பது அவசியமாகப் பட்டிருந்தாலும், உபயோகிக்கப்பட்ட பலாத்காரம், நிலைமைக்குத் தேவையானதைவிட அதிகமானதாகும். தரப்பட்ட தடியடி இதுவரை பஞ்சாப் சிறைகளின் வரலாற்றிலேயே இல்லாத அளவு அதிகமானதாகும்."

நடைபெற்ற தடியடியினால் பலத்த காயமுற்ற சூகெனி சிங் என்பவர் இறந்துவிட்டார் என்றும், 209 காவல் கைதிகள் காயம்பட்டனர் என்றும், இவர்களில் 29 பேர்களுக்கு பலத்த காயம் என்றும், 19 சிறை அதிகாரிகள், நான்கு அதிகாரிகளாகியுள்ள கைதிகள் ஆகியோரும் காயம்பட்டனர் என்றும் விசாரணை அறிக்கை கூறுகிறது.

வடவர் புரிந்த வஞ்சனை

சந்தானமும் சான்று பகருகிறார்

'தென்னாடு தொழில் அபிவிருத்தித் துறையில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது'

"பெரிய தோழிற்சாலைகள் அனைத்தும் வடநாட்டிலேயே குவிக்கப்படுகின்றன; தொழில் அபிவிருத்தித் துறையில் தென்னாட்டு மாநிலங்கள் — குறிப்பாகத் தமிழ் நாடு மிகவும் புறக்கணிக்கப்படுகின்றன; இதன் விளைவாக, வேலையில்லாத் திண்டாட்டமும், பற்றாக்குறை வேலைக் கஷ்டங்களும் நமது மாநிலத்தில் பெருமளவு பெருகி நிற்கின்றன"

என்பதாக, நிதிக் கமிஷன் தலைவராயிருந்த கே. சந்தானம் குடந்தையில் இராம விலாஸ் மோட்டார் கம்பெனியின் 16-வது ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

கல்வியைத் தேசியமயமாக்கும் திட்டமில்லையாம்!

சென்னை, நவ. 6—

"சென்னை மாநிலத்தில் கல்வி கற்பிக்கும் பொறுப்பு முழுவதையும் ஏன் அரசாங்கம் ஏற்று நடத்தக்கூடாது?" என்று கேட்டதற்கு, 'அத்தகைய திட்டம் இப்போது இல்லை' என்று கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது தெரிவித்தார்.

37வயது இளைஞர் பிரதமராகிறார்!

பிரெஞ்சு அமைச்சரவை நெருக்கடி தீர்ந்தது!

பாரிஸ், நவ. 6—

பிரான்ஸ் நாட்டில் கடந்த ஐந்து வாரங்களாக நீடித்துவந்த மந்திரிசபை நெருக்கடி இன்று தீர்ந்துள்ளது.

ரேடிகல் கட்சியைச் சேர்ந்த பெலிக்ஸ் கெயில் லார்ட் என்பார் பிரதம மந்திரியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

அவரது கூட்டு மந்திரிசபைக்கு ஆதரவாக 337 வாக்குகளும், எதிராக 173 வாக்குகளும் தேசிய சட்டசபையில் பதிவாகியுள்ளன.

ரேடிகல், சோஷலிஸ்டுகள், பாபுலர் ரிபப்ளிகன், கன்சர்

(4-ம் பக்கம் பார்க்க)

அநீதிக்கு எதிராக வளர்ந்துள்ள மனக்கசப்பு

மாற்றுவதற்குக் குறுக்கு வழி தேடுகிறது டில்லி

தென் மாநிலங்களில் சிறு நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு அதிக நிதியாம்!

இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும தென்னாட்டிற்கு இழைத்த அநீதிகளினால், மக்களிடை தங்களுக்கு எதிராக வளர்ந்துள்ள மனக்கசப்பை மாற்றுவதற்கு டெல்லிப் பெரியவர்கள் சில குறுக்கு வழிகளை தேடி அலைகின்றனர் போலும்!

அந்தச சிந்தனையுடன்தான் தென்னாட்டு மாநிலங்கள் நான்கின் பிரதிநிதிகளைக் கொண்ட மாநாடு ஒன்றினை பெங்களூரில் இத்திங்கள் 14-ம் நாள் கூட்ட டெல்லி உத்தேசித்திருக்கிறதாகத் தெரிகிறது.

இந்த மாநாட்டில், நான்கு தென மாநிலங்களிலும் சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றுவது பற்றி விவாதிக்கப்படுமாம்.

மாநாட்டிற்கு டெல்லி உதவி உணவு மந்திரி கிருஷ்ணப்பா தலைமைதாங்குவாராம்.

டெல்லி நிதி இலாகா செயலாளர் மாநாட்டில் கலந்துகொள்வாராம்.

இப்போது ஒதுக்கப்பட்டிருப்பதைவிட 50 சதவிகிதம் அதிகமாக நிதி ஒதுக்கி, தென் மாநிலங்களில் சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை துரிதமாக நிறைவேற்ற வழி வகுப்பது மாநாட்டின் நோக்கமாம்.

'தமிழ் காப்போம்— தன்மானம் காப்போம்'

இந்தித் திணிப்பை எதிர்த்துப் போர்முரசு

அக்டோபர் 13: நாடெங்கும் கண்டன ஊர்வலங்கள் — பொதுக்கூட்டங்கள்

தி. மு. க. போதுச்செயலாளர் விடுத்த அறிக்கைக்கிணங்க 13—10—57-ல் நாடெங்கும் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு ஊர்வலங்கள்— போதுக்கூட்டங்களின் விவரம் இங்கு தரப்படுகிறது :—

புதுக்கோட்டை :

மாலை 3 மணியளவில் நடைபெற்ற தி. மு. க.-மாணவர் கிளை பொது உறுப்பினர் கூட்டத்தில் தமிழ்நாட்டின்மீதும், திராவிட நாட்டின்மீதும் இந்தியைக் கட்டாயமாகத் திணித்து, இந்தி ஏகாதிபத்தியத்தை உருவாக்க முயற்சிப்பதைக் கண்டித்தும், கேர் கமிட்டி அறிக்கையை அமுல் நடத்தாமலிருக்க மத்திய அரசாங்கத்தை வேண்டிக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாலை 5 மணிக்கு பஸ் ஸ்டாண்டிலிருந்து, நகர தி. மு. க. சார்பில் புறப்பட்ட ஊர்வலத்தில் மாணவத் தோழர்கள் கலந்துகொண்டு திலகர் திடலை அடைந்து, அங்கு, தோழர் வீரையா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாணவத் தோழர் சிவஞானம் இந்தித் திணிப்பை எதிர்த்துப் பேசினர்.

நெடும்பலம் :

தி. மு. கழகச் சார்பில் தோழர் பி. கோபாலகிருஷ்ணன் தேனீர் நிலையத்தில் தோழர் டி. எஸ். கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தியை எதிர்ப்பதன் அவசியத்தை விளக்கிப் பேசியபின். இந்தி எதிர்ப்புத் தீர்மானத்தை தோழர்கள் ஆர். திருவேங்கடம் முன்மொழிய பி. கோபாலகிருஷ்ணன் வழிமொழிய ஒருமனதுடன் நிறைவேற்றப்பட்டது.

முசிரி :

முசிரி, வெள்ளூர், மணமேடு, உமயபுரம் தி. மு. கழகங்களின் சார்பில், மாலை, தி. சி. என். நடேசன் அவர்கள் மோட்டார் சைக்கிளில் கழகக் கொடியுடன் தலைமைவகித்து முன்செல்ல, சைக்கிள் ஊர்வலம் நடைபெற்றது. பின்னர் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு திரு. உ. வே. செல்வராஜ் தலைமைவகித்தார்; தோழர்கள் எச். கோவிந்தசாமி, வை. பரமசிவம், தியாகராசன், சிற்றுளி சுப்பிரமணியம் முதலியோர் சொற்பொழிவாற்றினர்; பின்னர் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தூத்துக்குடி தோழர் ஜி. அப்பாசாமி அவர்களால் 'மந்திரமா? தந்திரமா?' என்ற நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

தொ. சேடர்பாளையம் :

தி. மு. கழகச் சார்பில், மாலை 6 மணிககு, தோழர் ஏ. கந்தசாமி தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு பல முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று தி. மு. கழகத்தையடைந்தது; அங்கு, தோழர் க. கோவிந்தன் தலைமையில் தோழர்கள் ஏ. கந்தசாமி, அ. சுப்பு, ஏ. காவேரி, எஸ். வேலாயுதம், எஸ். நடேசன் ஆகியோர் பேசியபின், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அரண்மனைக்குரிச்சி :

தி. மு. கழகச் சார்பில், மாலை 4-மணிக்கு தோழர் சி. கோவிந்தசாமி தலைமையில் ஊர்வலமும், தோழர் சா. வேலுசாமி தலைமையில் கூட்டமும் நடைபெற்றது; தோழர் பி. பரமசிவம் கொடியேற்றினர்; தோழர்கள் மு. முத்தண்ணு, கோவிந்தராசன் பேசினர்; தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நமனசமுத்திரம் :

மாலை 6 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், தோழர் ஏ. அன்புபித்தன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் ஆர். எம். பத்மநாபன், எஸ். நாராயணன், மு. கணபதி, க. தி. திருநாவுக்கரசு, தி. அய்யாக்கண்ணு, இரா. செயராமன், செயலாளர் இரா. மா. பொன்னுசாமி ஆகியோர் இந்தித் திணிப்பால் தமிழகத்திற்கு ஏற்படும் இன்னல்களை விளக்கிப் பேசினர்.

புளியால் :

தி. மு. கழகச் சார்பில், காலை 9 மணிக்கு, தோழர் அரு. கணபதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், இந்தி எதிர்ப்பைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குணியமுத்தூர் :

காலை 7 மணிக்கு தோழர் கே. ஆர். சண்முகம் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு, பாலக்காடு ரோடு வழியாக முக்கிய தெருக்களைச் சுற்றிவந்தது; தி. மு. க. பணிமனைத் திடலில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பட்டுத்துறை :

மாலை 6 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், அண்ணு திடலில், தோழர் டி. இராமசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர் இளமுருகு, கன்னிவாடி-கே. எஸ். எஸ். பெரியார், மு. பன்னீர்செல்வன், பரமத்தி-சண்முகம், ஏ. எஸ். கந்தசாமி ஆகியோர் பேசினர்.

அத்திப்புலியூர் :

மாலை 4 மணிக்கு, தோழர் கோ. இராசமாணிக்கம் தலைமையில் ஊர்வலம் இன்னிசை வாத்தியங்களுடன், இந்தியை விரட்டும் நடன நிகழ்ச்சிகளுடனும், இந்தி எதிர்ப்பு ஒலிகளை முழக்கிக்கொண்டும் பல முக்கிய சிற்றூர்கள் வழியே சென்று கழகக் கட்டிடத்தை வந்தடைந்தது; கட்டிடத்தின் முன்பு நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இராசிபாளையம் :

தி. மு. கழகச் சார்பில் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது; கூட்டத்திற்கு தோழர் அனீபா தலைமை வகித்தார்; தோழர்கள் இரா. ப. அய்யாசாமி, அ. பழனிச்சாமி ஆகியோர் பேசியபின் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காட்டுமன்னார்குடி :

மாலை 6 மணிக்கு சத்தியவாணிமுத்து சொற்பயிற்சி மன்ற அலுவலகத்தில், தோழர் தில்லை-நடனம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் இராமலிங்கம், கிருட்டிணமூர்த்தி, நாராயணன், மஜீத் சுபையர், உசேன், அய்யாத்துரை, மூர்த்தி ஆகியோர் இந்தித் திணிப்பைக் கண்டித்து பேசியபின் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கரூர் :

மாலை 4 மணிக்கு தி. மு. க. சார்பில், போலீஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள குமரன் சிலைக்கு முன்பிருந்து, தோழர் பி. இராசமாணிக்கம் தலைமையில் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய தெருக்கள் வழியாகச் சென்று, முத்துராசபுரம் என். எஸ். கே. திடலை அடைந்தது; அங்கு தோழர் எம். குழந்தைவேல் எம். சி. தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர் பி. இராசமாணிக்கம் பேசியபின், தலைவரவர்களால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உப்புப்பாளையம் :

15—10—57-ல், வெள்ளக்கோவில் தி. மு. கழகச் சார்பில், திரு. கே. எஸ். எஸ். பெரியார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மருதூர் :

மாலை 6 மணிக்கு, தோழர் கி. நல்லமுத்து தலைமையில், சிவன் கோவிலிருந்து பெரிய தோர் அணிவகுப்பு புறப்பட்டு, கே. வி. கே. சாமி திடலை வந்தடைந்தது; அங்கு தோழர் சி. நல்லமுத்து தலைமையில் தோழர்கள் ம. மாணிக்கம், சி. துரையரசன், ந. அன்பரசன், பி. தமிழ்நாடன் ஆகியோர் பேசியபின், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருப்பரங்குன்றம் :

திராவிடப் பகுத்தறிவு மன்றச் சார்பில், மாலை 6 மணிக்குமேல் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு பல தெருக்களின் வழியாக சுற்றிவந்து, மன்றத்தை அடைந்து, தோழர் சுப்பிரமணியம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் லெ. அனந்தன், பா. சித்தர், மணிமொழியன், இரா. சு. அரசுக்கண்ணன் ஆகியோர் பேசியபின் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

சொக்கநாதன்புத்தூர் :

மாலை 6 மணியளவில், தோழர் கோ. சுப்பையா தலைமைல் மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது; பின்னர், தோழர்கள் வி. எஸ். கணபதி, சி. பல்ராசு ஆகியோர் பேசினர்.

மேல்ஆலத்தூர் :

தி. மு. க. சார்பில் இந்தி எதிர்ப்புப் பொதுக்கூட்டம் மேல் முட்டுக்கூர் பஞ்சாயத்து போர்டு தலைவர் திரு. வி. என். இராமலிங்கம் தலைமையில் கூடநகரம் அண்ணு திடலில் நடைபெற்றது; தோழர்கள் கூடநகரம் பஞ்சாயத்து போர்டு தலைவர் ஆர். கோவிந்தராசன், இரா. சாரங்கபாணி, பா. துரையரசு, ஜி. பி. கதிரேசன் ஆகியோர் பேசினர். கூட்டத்திற்குமுன், தோழர்கள் மு. பாப்பையன், சின்னகுட்டி ஆகியோர் தலைமையில் கொத்தக்குப்பம் கிராமத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு தி. மு. க. படிப்பகத்தில் முடிவுற்றது.

பஞ்சநதிக்குளம் :

இவ்வூர் தி. மு. கழக உறுப்பினர்கள கூட்டத்தில் இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டன.

கொடுங்கையூர் :

காலை 10 மணியளவில், தி. மு. கழகச் சார்பில் கண்டன ஊர்வலம் முக்கிய வீதிகளின் வழியாக வந்து, கழகத்தில் முடிவடைந்தது; பின்னர் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் பலர் இந்தி திணிப்பைக் கண்டித்துப் பேசிய பின்னர் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கள்ளிகுளம் :

தோழர் பெ. ம. சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்ற தி. மு. கழக உறுப்பினர் கூட்டத்தில், இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

சென்னநாய்க்கன்பாளையம்— நடுவிரப்பட்டு :

தோழர் பெ. ப. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தோழர்கள் வை. சிவப்பிரகாசம், சே. மூசா ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தும், வழிமொழிந்தும் பேசி ஏகமனதாக நிறைவேற்றினர்.

சென்னை—திருவான்மியூர் :

31—10—57-ல் நடைபெற்ற திருவள்ளுவர் மன்ற செயற்குழுக் கூட்டத்தில் இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புத்தாம்பூர் :

இவ்வூர் தி. மு. கழகம், இந்தி எதிர்ப்புத் தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்பியது.

வடசேரி :

வள்ளுவர் சொற்பயிற்சி மன்றச் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில், இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கருவம்பாளையம் :

19—10—57 இரவு 7 மணியளவில், தி. மு. கழகம்—படிப்பகச் சார்பில், தோழர் சி. ஏ. பாலன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சங்கரன்கோவில் :

22—10—27 காலை 10 மணியளவில் தோழர் சி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், இந்தித் திணிப்பைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாறும்பதி :

செங்கற்பட்டு மாவட்ட மாறும்பதி தி. மு. கழகம் இந்தி எதிர்ப்புத் தீர்மானங்களை நிறைவேற்றியது.

பொள்ளாச்சி :

திராவிட முன்னேற்ற வாலிபர் கழகத்தின் செயற் குழுக் கூட்டம் தோழர் அ. ச. பாலு தலைமையில் நடைபெற்றது; இந்தித் திணிப்பை எதிர்த்து தோழர்கள் க. துரைக்கண்ணன், தி. சதாசிவம், மா. பொன்மலை, வெங்கடாசலம் ஆகியோர் பேசியபின், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அழுந்தலைப்பூர் :

தி. மு. கழகச் சார்பில், இரவு 7 மணிக்கு ஊர்வலம் புறப்பட்டுச் சென்று, கே. வி. கே. சாமி திடலிலுள்ள கட்டிடத்தை அடைந்ததும், அங்கு நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் வி. அரங்கசாமி, எஸ். ஏ. சரவணன், பி. கோவிந்தசாமி, வை. ஆ. கந்தசாமி ஆகியோர் பேசியபின் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புதுப்பேட்டை (தெ: ஆ) :

மாலை 4-மணிக்கு, தி. மு. க. சார்பில் ஊர்வலம் நடைபெற்றது; பின்னர், தோழர் க. பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காட்டூர் :

மாலை 5 மணிக்கு இவ்வூர் தி. மு. கழகம், தோழர் க. இ. சொக்கலிங்கம் முன்னிலையில், கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றியது.

வெள்ளலூர் :

11—10—57-ல் நடைபெற்ற தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டத்தில், இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கீழக்கரை :

நகர் தி. மு. க. சார்பில், மஜீத் திடலில், தோழர் வீ. நடராசன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் நாகூர் அனீபா, கே. முத்து இன்னிசை வழங்கினர்; தோழர்கள் கே. ஆர். பி. மணிமொழியன், எம். எஸ். இளமதி பேசியபின், செயலாளர் சாந்திஉசேன் தீர்மானங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றினர்.

பத்மனேரி :

தி. மு. கழகச் சார்பில் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது; தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திண்டுக்கல் :

தி. மு. க. சார்பில், தோழர் ம. துரைச்சாமி தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

காங்கயம் :

தி. மு. கழகச் சார்பில், தோழர் தணிகாசலம் தலைமையில் நடைபெற்றது; அதுபோது தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

'கலை—தொழில் நுணுக்க—பெண்கள் கல்லூரிகள் வேண்டும்'

சேலம் மாணவர்கள் கோரிக்கை

சேலம், நவ. 5—

சேலம் திராவிட முன்னேற்றக் கழகம்—மாணவர் கிளை அமைப்புக் கூட்டம் வழக்கறிஞர் திரு. வி. சிவப்பிரகாசம் தலைமையில் கடந்த 28—10—57 அன்று நடைபெற்றபோது, இவ்வாண்டிற்கான நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கூட்டத்தில் கலைவாணர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், இந்தித் திணிப்பைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின. மேலும், சேலம் மாவட்டத்தில் புதிதாக கலைக் கல்லூரி, தொழில் நுணுக்கக் கல்லூரி, மற்றும் பெண்கள் கல்லூரி வேண்டும் என்றும் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

மற்றும், இப்போதுள்ள நகராண்மைக் கல்லூரியின் உணவு விடுதியை விரிவுபடுத்தவேண்டும் எனவும், தொலைவிலிருந்துவரும் மாணவர்களின் பகல் உணவு வசதிக்காகத் தனிக் கட்டிடம் வேண்டும் எனவும், கல்லூரி செல்லும் வழியைச் செம்மைப்படுத்தித் தரவேண்டுமென்வும் கோரிக்கைகள் விடுத்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தோழர்கள் கி. இராமன், வளவன், அப்துல் பசீர் ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகவும், மற்றும் பதினேறு பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (ந-நி.)

ஆசிரியருக்குக் கடிதம் :

அரசாங்கத்திற்கு ஓர் வேண்டுகோள்

ஐயா,

கடந்த அக்டோபர் மாதம் நடந்த எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் கணக்குப் பரிட்சையில் I-தாளில் B-பிரிவில்(I-Paper B-Part VIII-Sum) 8-வது கணக்குத் தவறானது— செய்ய முடியாதது. அதில் டிகிரி அளவுகள் முறை மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான மாணவர்கள் அதைப் போட 30 நிமிடங்களாக முயன்று முடியாமல் குழம்பிப்போனுர்கள். அதனுல் மற்றக் கணக்குகளையும் செய்ய முடியாமல் பலபேர் விட்டுவிட்டனர்.

ஆகவே அரசாங்கத்தார் அந்தக் கணக்கிற்குரிய மதிப்பெண் பத்தைப் பரிட்சை எழுதிய எல்லோருக்கும் அளித்துவிட வேண்டுமென்று மிகப் பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

சென்ற ஒரு மாதமாக, கல்வித்துறை வல்லாரிடமிருந்து இது பற்றிய அறிக்கைகள் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்தேன். உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும், ஆசிரியர்களும்,கல்வியின்பால் ஆர்வமுள்ள மற்ற அன்பர்களும், இந்த வேண்டுகோள் நிறைவேற வேண்டிய முயற்சிகளில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தலைமையாசிரியர்கள் சங்கம் இந்தச் செயலில் ஈடுபட்டு, முன்னின்று முயன்று, அக்டோபர் பரிட்சை மாணவருக்கு உதவ கேட்டுக்கொள்கிறேன்.

வ. தமிழ்த்தொண்டன்,
சென்னை-21 : 6-11-57

பாடப் புத்தகங்களை வெளியிடும் பொறுப்பு

சர்க்காரே மேற்கொள்ள வேண்டிய அவசியமென்ன?

சர்வாதிகாரமான நோக்கிற்கு எம். பி. சுப்பிரமணியம் எதிர்ப்பு

சென்னை, நவ. 6—

கல்வி பற்றிய 'வெள்ளை அறிக்கை'யை ஆராய்ந்து சட்ட மன்றக் குழு அளித்துள்ள அறிக்கைமீது சட்ட மன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு தோழர் எம். பி. சுப்பிரமணியம் ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

"கல்விச் சீர்திருத்தமும், மாற்றமும், சட்டபூர்வமாக வரவேண்டியது அவசியம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன் ; ஆனால், இந்த மன்றத்தின் அனுமதியில்லாமலும், உறுப்பினர்களைக் கலந்தாலோசிக்காமலும், அரசாங்கம் அடிக்கடி மாற்றங்களை உண்டாக்கிவருகிறது; இது சரியல்ல.

"பாடப் புத்தகங்களை வெளியிடும் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள முனைந்திருப்பது, கல்வித் துறையை சர்வாதிகாரப் போக்கிற்கு அழைத்துச் செல்லும் நிலையை ஏற்படுத்துவதாகும்.

"தனியார் துறையினர் இப்போது கொள்ளை இலாபம் சம்பாதிப்பது உண்மைதான். அரசாங்கத்திற்கு நல்ல முறையில் வருமானம் வருவதை நான் தடுக்கவில்லை. ஆனால், பாடப்புத்தகங்களை வெளியிடுவதில் பெறும் அதிக இலாபத்திலிருந்து அரசாங்கம் பெறுவதைவிட வேறு வழிகளில் அதிக பணத்தைப் பெற முடியும். எனவே, அரசாங்கம் பாடப் புத்தகங்களை வெளியிட முனைவது அவசியம் அல்ல என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்."

பெரியார் கைது பற்றித் தீர்மானம்

சட்டமன்றத் தலைவர் நிராகரிப்பு

சென்னை, நவ. 7—

'பெரியார் கைது செய்யப்பட்டதைப் பற்றி விவாதிக்க சட்ட மன்ற நடவடிக்கை ஒத்தி வைக்கப்பட வேண்டும்' என்று திரு. ஆதித்தன் கொண்டுவந்த 'ஒத்திவைப்புத் தீர்மானத்தை' மன்றத் தலைவர் நிராகரித்தார்.

பெரியார் கைது செய்யப்பட்டது சட்டத்தையும், அமைதியையும் நிலைநாட்ட மேற்கொண்ட சாதாரண விஷயம் என்று தலைவர் கூறினர்.

பார்மோசாவிற்கு அங்கீகாரம்பெற

அமெரிக்காவின் குறுக்கு வழி

செஞ்சிலுவை மாநாடு தப்பித்தது

புதுடில்லி, நவ. 6—

பார்மோசாவை, சீன மக்கள் குடியரசு என ஏற்றுக்கொண்டு, இங்கு நடைபெறும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மாநாட்டில் அதற்கு இடமளிக்க வேண்டும் என்று எழுப்பப்பட்ட கோரிக்கையின் விளைவாக, மாநாடே முறிந்துவிடலாம் என்ற அச்சம் இப்போது. தற்காலிகமாகவேனும் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

பார்மோசாவிற்கு அப்படி இடமளிக்க வேண்டுமென தீர்மானம் ஒன்றின் மூலம் அமெரிக்கா கோரியது. இதை ஒட்டி, இப்படிப்பட்ட தீர்மானம் ஒட்டுக்கு விடப்பட்டால் பல நாடுகள் தாங்கள் வெளியேறிவிடுவதாக எச்சரித்திருந்தன.

தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலையைத் தங்கள் மீது திணித்தால், மாநாட்டுப் பிரதிநிதிகளை விருந்தினர்களாக ஏற்று நடத்தும் இந்தியா, மாநாட்டிற்கு ஒத்துழைப்பு தராது என்று எச்சரித்திருந்தது.

அதன் விளைவாக, பிரேசில் ஒரு தீர்மானம் மூலம், நேரிடவிருந்த விபத்துக்களிலிருந்து மாநாட்டைக் காப்பாற்றியிருக்கிறது.

அதாவது, அமெரிக்காவின் தீர்மானத்தை மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் கடைசி நிகழ்ச்சியாக வைத்துக்கொள்வது என்பதே பிரேசில் கொண்டுவந்த தீர்மானம்; இது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

'விற்பனை வரி' சீர்திருத்தம்

கழக உறுப்பினர் கேள்விகள்

சென்னை, நவ. 7—

விற்பனை வரி முறையை ஆராய்ந்து மிகவும் அவசியமான திருத்தங்களைக் கூறுவதற்காக நியமிக்கப்பட்ட டாக்டர் லோகநாதன் குழு, இன்னும் பல்வேறு விஷயங்களை ஆராய்ந்துகொண்டே உள்ளதாம். அறிக்கை தயாரிக்கக் காலவரம்பு நிர்ணயிக்கப்படவில்லையாம். இடைக்கால அறிக்கை எதும் டாக்டர் லோகநாதன் குழு அனுப்பவில்லையாம்.

சென்னை சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் இதனைத் தெரிவித்தார்.

"ஒருமுனை விற்பனை வரி விதிக்கப்பட்டுள்ள ஒருசில பொருள்களை வெளி மாநில வியாபாரிகள் செலுத்தாமல், வேறு வழிகளைக் கையாண்டு வருவதாகக் கூறப்படுகிறதே, இது உண்மையா?"

என்று தோழர் க. அன்பழகன் கேட்டார்.

'உண்மைதான்' என்றும், விற்பனை வரியில்லாத புதுவை போன்ற இடங்களிலிருந்து புகையிலை போன்ற பொருள்கள் வருகிறதென்றும், மத்திய சுங்க வரி விதித்து நிலைமையைச் சீர்படுத்த ஒரு யோசனையுள்ளது என்றும் அமைச்சர் பதிலளித்தார்.

"டாக்டர் லோகநாதன் சில யோசனைகளைப் பத்திரிகைகளில் வெளியிட்டுள்ளது சரியா?"

என்று தோழர் எம். பி. சுப்பிரமணியம் கேட்டார்.

"மக்கள் யோசனைகளைக் கேட்டறியும் நோக்குடன் அவர் அவ்வாறு செய்திருப்பார்; ஆனால், அறிக்கை தயாராகுமுன் எது சரி என்று கூறுவதற்கில்லை" என்று அமைச்சர் பதிலளித்தார்.

"சில வடநாட்டு முதலாளிகள் விற்பனை வரியைச் செலுத்தாமல் இருப்பதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது?"

என்று தோழர் க. அன்பழகன் கேட்டார்.

"அப்படி தகவல் இருந்தால் உறுப்பினர், எழுத்து மூலம் அறிவிக்க வேண்டுகிறேன்" என்று அமைச்சர் பதிலளித்தார்.

'புதிய காசு' குழப்பம்

ஒருவாறு தீர்ந்துவிட்டதாம்!

சென்னை, நவ. 6—

சென்னை சர்க்கார் பஸ் போக்குவரத்தில் இரண்டு இரண்டணா நாணயங்களை ஒன்ருகத் தரும்போது 25 புதிய காசுகளாக ஏற்றுக்கொள்ளும்படி உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் கேள்வி நேரத்தின்போது சட்ட மன்றத்தில் தெரிவித்தார்.

"இதேபோன்று, 4 ஓரணா நாணயங்களும் 25 புதிய காசுகளுக்கு ஈடாகவில்லையா?" என்று தோழர் க. அன்பழகன் கேட்டார்.

"பல சிக்கல்களுக்குப்பின், இப்பிரச்சினையில் ஓரளவுக்கு முடிவு செய்யப்பட்டுள்ளது; புதிய காசுகள், பழைய நாணய மாற்ற அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது. மேலும் கேள்விகள் எழுப்பி இத்துறையில் சிக்கலை உண்டாக்க வேண்டாமென்று உறுப்பினர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். புதிய காசுகள்—பழைய நாணய மாற்றத்தால் கண்டக்டர்களுக்குச் சிறிது தொல்லைகள் ஏற்படுகிறது; இதையும் நாம் கவனிக்க வேண்டும்" என்று அமைச்சர் கூறினர்.

3,-வயது இளைஞர்......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வேடிவ், மற்றும் இதர கட்சியினர் சேர்ந்து இந்த மந்திரி சபையை அமைத்துள்ளனர்.

புதிய பிரதமர் 37 வயது மட்டுமே நிரம்பியவராம்! இவர்தான் நெப்போலியனுக்கு அடுத்தபடியாக மிகவும் இளைஞரான பிரதம மந்திரியாம்!

நெப்போலியன், 1799-ம் ஆண்டில் தனது 30-வது வயதில் பிரான்சு நாட்டின் ஏகச் சக்ராதிபதியானர்.

புதிய பிரதமர், பிரான்சு நாட்டின் மிக அதிசயிக்கத்தக்க பொருளாதார நிபுணராம். அவர் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை விரட்டி, 'பிராங்கை'க் காப்பாற்ற உறுதி பூண்டுள்ளாராம்!

தி. மு. க. கலை நிகழ்ச்சி

9—11—57 இரவு 8 மணிக்கு சேலம்—அம்மாபேட்டை காந்தி மைதானத்தில் தோழர் கே. ஆர். மாசிலாமணி தலைமையில் தோழர் டி. எம் அன்னுமலை குழுவினரால் தி. மு. க. கலை நிகழ்ச்சி நடத்தப்பெறும். இடையில் தோழர்கள் சிற்றுளி-சுப்பிரமணியம், கே. ஆர். சிந்தன் ஆகியோர் பேசுவர்.

என். எஸ். கே. இலவசப் படிப்பகத் திறப்பு விழா

10—11—57 மாலை மதுராந்தகத்தில் மேற்படி விழா நடைபெறும். புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் படிப்பகக் கட்டடத்தைத் திறந்துவைப்பார். தோழர் கண்ணதாசன் என். எஸ். கே. படத்தைத் திறந்துவைப்பார். பிற்பகலில் ஏழைகளுக்கு உணவளிக்கப்படும்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை--3வது வட்டம்:

இராபின்சன் பூங்கா திடலில்
10—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : பி. ஏ. ஆறுமுகம்
பேசுவோர் :
அண்ணு
மாணவி-சற்குணம்
மாணவன்-சத்தியநாதன்
(அண்ணு அவர்கள், கே. எஸ். பாண்டியன் படத்தைத் திறந்து வைப்பார்கள்.)

★

திண்டுக்கல்:

பேகம்பூர்பூச்சிநாயக்கன்பட்டி
அண்ணு திடலில்
10—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : எம். பிச்சை
பேசுவோர் :
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
பி. சமதர்மம், என். முத்து

★

சேலம்:

மஜீத் மன்றத் துவக்கவிழா
ஜலால்பூரு காரைக்கிணறு மைதானம்
10—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : எம். பி. ரசீத்
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
ஈ. ஆர். கிருஷ்ணன்
சிற்றுளி-சுப்பிரமணியம்
வி. சிவப்பிரகாசம்
எஸ். ஏ. அன்புக்கரசு
ஏ. மாரியப்பன் எம்.சி.
சி. ஏ. திவான்

★

லால்குடி:

சிவன் கோவில் முன்பு
9—11—57 மாலை 5 மணிக்கு
தலைவர் : மு. க. து. நடேசன்
பேசுவோர் :
அன்பில்-தர்மலிங்கம்
கே. ஆர். பி. மணிமொழியன்

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை நினைவு நாள்

9—11—57 மாலை 6½ மணிக்கு சென்னை—பெத்துநாய்க்கன் பேட்டை மணவழகர் மன்றத்தின் சார்பில் முருகேசமுதலித் தெரு, 2-ம் எண்ணுள்ள இல்லத்தில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை நினைவு நாள் தோழியர் வெற்றிச்செல்வி-அன்பழகன் தலைமையில் நடைபெறும். பேசுவோர் :— தோழியர்கள் தாமரைக்கண்ணியம்மாள், பார்வதியம்மாள், சுந்தராம்பாள-இளஞ்செழியன், எம். டி. வி. பரமேசுவரி, கமலா-பாலசுந்தரம், பொற்செல்வி, தமிழ்ச்செல்வி, கலைச்செல்வி, அனுசுயா-மோகனசுந்தரம், அமுதா. இசை, நடனங்களும் உண்டு.

எருக்கஞ்சேரியில் தொழிலாளர் காலனி திறப்பு

9—11—57 மாலை 6½ மணிக்கு தொழிலமைச்சர் திரு. வெங்கட்ராமன் தலைமையில் முதலமைச்சர் திரு. காமராசர் எருக்கஞ்சேரியில் அமைக்கப்பட்டுள்ள தொழிலாளர் காலனியான சர்மா நகரைத் திறந்துவைப்பார்.

ஒத்திவைப்பு

9—11—57-ல் காட்டுப்பாடி வ. உ. சி. பூங்கா வெளியில் இரவு 8-மணிக்கு நடக்கவிருந்த கழகக் கூட்டம் மழையின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சூலூர் கழகத் தோழர்களுக்கு:

கோவை மாவட்டம் சூலூர் கிளைக் கழகத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்த்துக் கோள்வது குறித்துத் தோழர்களைக் கலந்து விசாரித்தறிய, தலைமை நிலையத்தின் சார்பில், தி. மு. கழகப் பொதுக் குழு உறுப்பினர் தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டு, 10—11—57 ஞாயிறன்று சூலூருக்கு வருகிருர்.

சூலூர் கழக நிர்வாகிகள்-உறுப்பினர்கள் ஆகியோரும், புதிதாக உறுப்பினராகச் சேர விழையும் தோழர்களும் விசாரணை அதிகாரியிடம்10-11-57 காலை 10 மணிக்கு நேரில் வந்திருந்து தங்கள் தங்களது கருத்தைத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

தமிழ் விழா

★

போதுச்செயலாளர்
இரா. நெடுஞ்செழியன்
கலந்துகொள்வார்

10—11—57 காலை 10 மணியளவில், பெங்களூரில்—சர் புட்டண்ண செட்டி டவுன் ஹாலில், திரு. டி. எம். வேதநாயகம் தலைமையில் தமிழ் விழா நடைபெறும்; திருமதி எஸ். கே. ஜெகதீசுவரி விழாவைத் துவக்கிவைப்பார்; தி.மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தோழர்கள் க. அப்பாதுரையார், ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ., கண்ணதாசன், டி. கே. சீனிவாசன், ஆர். எஸ். பாண்டியன் ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர். இசை: சேலம்-நித்தியானந்தன்; கலை நிகழ்ச்சி: அசோகன் குழு வில்லுப்பாட்டு-'கலைவாணர் கதை'.

சேலம்-- ஆத்தூர் தி.மு.க உறுப்பினர்களுக்கு:

9—11—57 காலை 10 மணிக்கு சேலம்—ஆத்தூர் தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் டி. கே. மாதவன் இல்லத்தில் நடைபெறும்.

தச்சநல்லூர் தி. மு. கழக உறுப்பினர்கட்கு:

10—11—57காலை 10 மணிக்கு கழகக் கட்டிடத்தில் தச்சநல்லூர் (நெல்லை) தி. மு. க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

10—11—57 காலை 9-30 மணிக்கு சென்னை—பெத்துநாய்க்கன்பேட்டை மக்கள் மன்றத்தில் தோழர் சி. வே. செல்வாங்கம் தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் பெ. தா. இன்மொழியன், ஈ. சிவகுமாரன், க. மு. ர. நந்தகோபால், அ. இராசேந்திரன், கே. பாலசுந்தரம் ஆகியோர் பேசுவர்.

* * *

10—11—57 மாலை 4 மணிக்கு நெல்லை 13-வது வட்ட திராவிட முற்போக்கு மன்றத்தில் தோழர் தமிழ்தாசன் தலைமையில் 'பண்டைத் தமிழகம்' என்ற தலைப்பின்கீழ் பலர் பேசுவர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

வடசென்னை தேர்தல் வழக்கு நிதி

சிறப்புக் கூட்டம்

★

9-11-57 சனி மாலை 6-மணிக்கு : சென்னை கோகலே மண்டபத்தில்

தலைவர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி M.L.A.

பேசுவோர்:

கருணாநிதி, எம்.ஜி. ராமச்சந்திரன், வி.பி.ராமன்

நன்கொடை : ரூ. 1, அணு 8.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.